**7 th Term 3, அலகு - 1**

## பெண்கள் மேம்பாடு

1. பின்வருவனவற்றில் எது பாலின சமத்துவமின்மை அல்ல ?

அ) மோசமான பேறுகால ஆரோக்கியம்

ஆ) ஆண்களுக்கு அதிக பாதுகாப்பற்ற தன்மை

இ) எச்.ஐ.வி/எய்ட்ஸ் பரவுதல்

ஈ) பெண்களின் குறைந்த எழுத்தறிவு விகிதம்

2. சுதந்திர இந்தியாவில் ஆண் - பெண் கல்வியறிவு இடைவெளி வீதம் மிக அதிகமாக காணப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆண்டு —-------

அ. 2011 ஆ . 1991 இ. 2001 ஈ . 1981

3 . பாலின சமத்துவம் என்பது எது தொடர்புடைய பிரச்சனை

அ) பெண்குழந்தைகள் ; பெண்களின் பிரச்சனை

ஆ) அனைத்து சமூகத்திலும் பெண்களும் ஆண்களும் சமம்

இ) மூன்றாம் உலக நாடுகள் மட்டும்

ஈ) வளர்ந்த நாடுகள் மட்டும்

4. அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முதல் பெண் யார் ?

அ) 1979-ல் அன்னை தெரசா ஆ) 1974-ல் வங்காரி மாதாய்

இ) 1971-ல் அன்னை தெரசா ஈ) 2004-ல் வங்காரி மாதாய்

5. பெண்கள் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக மேம்பட பின்வரும் எந்த உத்திகள் உதவுகின்றது?

அ) பாகுபாடுகளுக்கு எதிரான சவால்களுக்கு பெண்கள் இணைந்து பணியாற்றுகின்றனர்

ஆ) பெண்களுக்கான அதிகமான வருமான ஆதாரங்கள்

இ) மேம்பட்ட கல்விக்கான அணுகுமுறை

ஈ) மேலே உள்ள அனைத்தும்

6. இந்தியாவின் முதல் பெண் குடியரசுத் தலைவர் —-----------

அ) இந்திரா காந்தி ஆ)சரோஜினி நாயுடு இ) சுசித் கிருபாளினி ஈ) பிரதீபா பட்டேல்

7. வளரும் நாடுகளில் சிறுவர்களைவிட பெண்குழந்தைகள் இடைநிலைக் கல்வியை தவற விடுவது ஏன் ?

அ) பள்ளிக் கல்வி கட்டணம் உயர்வு காரணமாக, சிறுவர்கள் மட்டும் பள்ளிக்கு அனுப்பப்படுகிறார்கள்

ஆ) பெண்குழந்தை வீட்டு வேலை செய்ய எதிர்பார்க்கப்படுகிறது .

இ) குழந்தைத் திருமணம் அவர்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது .

ஈ) மேலே உள்ள அனைத்தும்

youtube: Gurumani@24

LIVEWORKSHEETS

8. சுதந்திர இந்தியாவில் ஆண் -பெண் கல்வியறிவு இடைவெளி வீதம் மிகக் குறைவாகக் காணப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆண்டு —---

அ. 2011 ஆ . 1991 இ. 2001 ஈ . 1981

9. இந்தியாவில் பெண்கள் கல்வியை செயல்வடிவாக்கிய ஜோதிராவ் புலே நினைவில் வைக்கப்படுகிறார் அவர், தனது மனைவியுடன் —---------- 1848-ல் சிறுமிகளுக்கான முதல் பள்ளியைத் தொடங்கினார் .

அ) மும்பை ஆ) கல்கத்தா இ) புனே ஈ) சூரத்

10. ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்ற முதல் பெண் —----

அ) சார்லோட் கூப்பர் ஆ) ஜன்கோ தபே

இ) வாலெண்டினா தெரேஷ்கோவா ஈ) கர்ணம் மல்லேஸ்வரி

11. மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பதவி வகித்த முதல் பெண் —---

அ) இந்திரா காந்தி ஆ)சுஷ்மா ஸ்வராஜ் இ) சுசித் கிருபாளினி ஈ) பிரதீபா பட்டேல்

12. "பெண்களை பலவீனமான பாலினம் என்று சொல்வது ஒரு அவதூறு. அது பெண் இனத்திற்கு ஆணினம் இழைத்த அநீதியாகும்.

அ) பராக் ஒபாமா ஆ) பில் கிளிண்டன் இ) ஜோதிபா பூலே ஈ) மகாத்மா காந்தி

13. முதல் பெண்காவல்துறை இயக்குநர்(DGP) —--- ஆவார்.

அ) இந்திரா காந்தி ஆ)சுஷ்மா ஸ்வராஜ்

இ) சுசித் கிருபாளினி ஈ) காஞ்சன் சௌத்ரி பட்டச்சாரியா

14. " நமது எதிர்காலம் பெண்களை உதாசீனப்படுத்துவோர் கைகளில் இல்லை" என்று கூறியவர்

அ) பராக் ஒபாமா ஆ) பில் கிளிண்டன் இ) ஜோதிபா பூலே ஈ) மகாத்மா காந்தி

15. புக்கர் பரிசை வென்ற முதல் இந்திய பெண் —---------

அ) இந்திரா காந்தி ஆ)சுஷ்மா ஸ்வராஜ்

இ) அருந்ததி ராய் ஈ) காஞ்சன் சௌத்ரி பட்டச்சாரியா

16. ஐக்கிய நாடுகள் சபையின் முதல் பெண் தலைவர் —---------

அ) 1951-ல் சரோஜினி நாயுடு ஆ) 1953-ல் விஜயலெட்சுமி பண்டிட்

இ) 1953-ல் சரோஜினி நாயுடு ஈ) 1951-ல் விஜயலெட்சுமி பண்டிட்

17. பொருத்துக:-

| | | |
|---|---|---|
| 1. சிரிமாவோ பண்டாரநாயக் | – | அ. இங்கிலாந்து |
| 2. வாலெண்டினா தெரோஷ்கோவா | - | ஆ. ஜப்பான் |
| 3 . ஜன்கோ தபே | – | இ. இலங்கை |
| 4. சார்லோட் கூப்பர் | – | ஈ. சோவியத் ஒன்றியம் |

அ) 1 - ஆ, 2 - அ , 3 - ஈ, 4 - இ ஆ) 1 - இ, 2 - ஈ, 3 - ஆ , 4 - அ

இ) 1 - அ , 2 -ஆ , 3 - இ , 4 - ஈ ஈ) 1 - ஈ , 2 - இ, 3 - அ, 4 - ஆ

youtube- Gurumani@24

LIVEWORKSHEETS

18. பெண்கள் மேம்பாட்டிற்கான முக்கிய காரணி எது?

அ) எழுத்தறிவின்மை ஆ) சுகாதாரம் இ) பணம் ஈ) கல்வி

19. பொருத்தமான பதிலைத் தேர்வு செய்க :-

கூற்று(கூ) : இப்போது அனைத்து மனிதாபிமான நடவடிக்கைகள் அனைத்திலும் ஒருங்கிணைகிறார்கள்.

காரணம்(கா) : சமூகத்தின் அனைத்து மோதல்களிலும் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும் .

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

ஈ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரி.

20. கீழ்க்கண்ட எது பெண் கல்வியறிவு வீதம் குறைவதற்கான காரணம் அல்ல.

அ) பள்ளிகளில் பெண் குழந்தைகளின் சேர்க்கை குறைவு.

ஆ) பள்ளிகளில் குறைந்த தக்க வைத்தல் வீதம் மற்றும் அதிக இடைநிற்றல் வீதம்.

இ) பொருளாதார மேம்பாடடைதல்

ஈ) பாலின சமத்துவமின்மை

21. பொருத்தமான பதிலைத் தேர்வு செய்க :-

கூற்று (கூ) : பெண்களுக்கு எதிரான வன்முறை சாதி, மதம் , வர்க்கம், வயது மற்றும் கல்வியை கடந்து நடைபெறுகிறது.

காரணம் (கா) : வீட்டு வன்முறைகள், கருக்கலைப்பு, பெண்சிசுக் கொலை, வரதட்சணை கொலை, திருமணம் மூலம் கொடுமை, சிறுவருக்கு நிகழும் கொடுமைகள் என வெளிப்படுகிறது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும் .

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

ஈ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரி.

youtube. Gurumani@24

LIVEWORKSHEETS